**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்கும் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் (**"**ஆணைக்குழு") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள்

பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,239,466 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,943,368 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 12,182,834 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முறையே ஊழியர் ஊதியம், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளுக்கான செலவினம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம், பெறுமானத் தேய்வு மற்றும் காலக்கழிவு முறையே ரூபா 2,166,591 தொகை, ரூபா 1,954,089 தொகை, ரூபா 6,095,491 மற்றும் ரூபா 2,047,594 அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 57,474,000 ஆகவும் | அரசாங்கத்தின் செலவினக் கட்டுப்பாட்டிற்காக விநியோகிக்கப்பட்ட வரவு | பாதீடு தயாரிக்கும் போது மிகவும் பொருத்தமாகவும் |

| | | |
|---|---|---|
| உள்ளபடியான செலவினம் ரூபா 31,874,722 ஆகவும் இருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கிடையே வேறுபாடு ரூபா 25,599,278 ஆகும். அப் பெறுமதி பாதீடு செய்யப்பட்ட மொத்த பெறுமதியில் 44.5 சதவீதமாக இருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட பெறுமதி எதிர்வு கூறும் போது மிகவும் தர்க்க ரீதியான அடிப்படையில் பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக பாதீட்டில் இருந்து ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் அநேகமாக சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே உரிய மீளாய்வு நடவடிக்கைகள் தாமதமடைந்தமையினால் நிறுவன மீளாய்விற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | காலரீதியிலும் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் போதியளவான முரண்கள் அவதானிக்கப்படுமாயின் முறையான பிரகாரம் திருத்துதல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்குரிய கட்டிட வாடகை செலவினம் ரூபா 8,977,032 ஆகும். அது கிடைத்த மீண்டெழும் மானியத்தில் சதவீதமாக 38.43 வீதமாக இருந்ததுடன் மொத்த செலவினத்தில் 24 சதவீதமாக இருந்தது. மேலும் 2023 ஆம் ஆண்டில் சம்பளத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 12,555,903 ஆக இருந்ததுடன் அந்த செலவினம் கிடைத்த மீண்டெழும் மானியத்தில் 53.75 சதவீதமாக இருந்ததுடன் மொத்த செலவினத்தில் 33.46 சதவீதமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எனினும் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்திற்காக அதாவது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 7,057,079 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி மொத்த செலவினத்தில் 18.8 சதவீதம் மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றல் தொடர்பில் பங்களிப்பினை விட ஏனைய மீண்டெழும் செலவினத்திற்காக செலவினம் செலவிடப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் நிதிசார் செயல்முன்னேற்றம் 18.8 சதவீதமாகவும், பௌதீக செயல்முன்னேற்றம் 80 சதவீத அளவும் கைப்பற்ற முடியுமாக இருந்தது. இவ்வாறே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கு அரச செலவின கட்டுப்பாட்டிற்காக விநியோகிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட சுற்றிற்கை தாக்கமளித்திருந்ததுடன் அநேகமான செயற்பாடுகளில் மேற்கொள்ளும் முறைமையும் இந்த சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மாற்றப்பட்டிருந்தது. இதனால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களின் நிதி ஏற்பாடு சேமிக்க முடியுமாக இருந்தது. | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக பொருத்தமான பிரகாரம் திட்டங்களைத் தயாரித்து அதன் பிரகாரம் செயற்திற னாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 2021/01 ஆம் இலக்கத்துடன் நிதி அமைச்சின் பொது முயற்சிகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான தொழிற்பாட்டுக் கைநூலில் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு ஆரம்பமாகி 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை இது வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் ஆண்டறிக்கை 2024.04.02 ஆம் திகதியும், 2022 இன் ஆண்டறிக்கை 2024.04.19 ஆம் திகதியும் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பிரதான 06 செயற்பாடுகளுக்காக ரூபா 20 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலவிடப்பட்ட உள்ளபடியான பெறுமதி ரூபா 04 மில்லியன் மாத்திரம் ஆகும். அது ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதம் ஆன சிறிய அளவாகும். இந்த நிதி ஏற்பாட்டில் இருந்து பதவி யணியினர் பயிற்சிக்காக ரூபா 1.2 மில்லியன் தொகை | வரவு செலவுத்திட்ட அடிப்படையாகக் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள பிரதான செயற்பாடுகளில் குறித்துரைத்த முறைமை மாற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் அநேகமான நிகழ்ச்சித்திட்டங்கள் இணையளவழி ஊடாகவும் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகவும் மேற்கொள்ளப்பட்டமையால் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை சேமிக்க முடியுமாக இருந்தது. மீளாய்வு நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் காரணமாகவும் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அதில் 30 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டதன் காரணமாக மனிதவள அபிவிருத்தி தொடர்பாக கவனத்தில் கொள்ளல் போதியளவான மட்டத்தில் காணப்படவில்லை. | செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 01/2023(இ) இன் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய பயிற்சி சந்தர்ப்பங்கள் மற்றும் அத்தியாவசிய பயிற்சியளித்தல் சந்தர்ப்பங்கள் மாத்திரம் பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. |